உ
சிவமயம்



அமரர்

# திருமதி சின்னத்தம்பி இரத்தினம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**14.02.2011**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நினைவுத்தீபம்



நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு,
கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்**

## சின்னத்தம்பி இரத்தினம்மா

**அவர்களின் சிவபதம் குறித்த**

## நினைவுமலர்

**14-02-2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்புக்கு அணிகலனாய்

பாசத்தின் இருப்பிடமாய்

பொறுமையின் பொக்கிசமாய்

அணைப்பிலே சிகரமாய்

எமது இதயத்தில் என்றும்

அணையாத் தீபமாய் சுடர் வீசும்

மறைந்தும் மறையாத எம் அன்புத்

தெய்வத்தின் பாதக் கமலங்களுக்கு

இந் நினைவு மலரினை

அன்புக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நந்தாவில் லேன்
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பிறப்பு 1926 - 01 - 12



இறப்பு 2011 - 01 - 15

அமரர்

# சின்னத்தம்பி இரத்தினம்மா

அவர்களின்

## "திதி வெண்பா"

விகிர்தி வருஷம் விளங்கு தை பூர்வ
பக்க விதித்த ஏகாதசிதிதியன்று - இரத்தினம்மா தாம்
மன்னு தவத்தால் இறையடியைச் சார்ந்து அங்கே
இன்புற் றமர்ந்தார் இணைந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்புக்கணவர் மார்க்கண்டு சின்னத்தம்பி அவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணியுமின் கனிந்து.

## தேவாரம்

நாமார்க்குங் குடி அல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்படடோம் நடலை யில்வோம்
ஏமாப்போம் பிணி அறிவோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாம் ஆர்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழை ஓர் காதிற்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடி இணையே குறுகினோமே

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமுங்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
என்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

### திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன் பெற்ற
தார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே

### திருப்புராணம்

இறைவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்

### வாழ்த்துப் புராணம்

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமவளி

ஜெய கணேச ஜெய கணேச
ஜெய கணேச பாஹிமாம்

ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச
ஸ்ரீ கணேச ரஷமாம்

கந்த முருகா கதிர் வேலவனே
மைந்தா குமார மறை நாயகனே

குருபரா குகா சண்முகா
வெற்றி வேலா வாவா

வள்ளி தெய்வானை மருவும்
மயில் முருகா வா வா

குமர குருபர முருக சரவணா
குகா சண்முகா ஜெ ஜே ஜே

சிவாய நம ஓம் சிவாய நமஹ
சிவாய நம ஓம் நமச்சிவாய

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஆதி சக்தி மகா சக்தி பராசக்தி ஓம்

ஹரே ராமா ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

ஹரே கிருஷ்ணா ஹரே கிருஷ்ணா
கிருஷ்ணா கிருஷ்ணா ஹரே ஹரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி இரத்தினம்மா சின்னத்தம்பி அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

இலங்கை மணித்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் ஆலயங்கள் பல சூழ்ந்த கொக்குவில் கற்புலத்து மனோன்மணி அம்பிகை வீற்றிருந்து அருளாட்சி புரியும் கிராமமாக விளங்குவது நந்தாவில்.

ஆலயத்தின் கிழக்குப் பகுதியில் மார்க்கண்டு என்பவருக்கும் வள்ளிப்பிள்ளை என்பவருக்கும் மகனாக சின்னத்தம்பி பிறந்தார். இவருக்கு சின்னையா நல்லையா என்ற இரு சகோதரர்களும் யோகம்மா என்னும் ஒரு சகோதரியும் இருந்தனர்.

ஆலயத்தின் தென்பால் சுவாமிநாதன், வியாழப்பிள்ளை தம்பதியினருக்கு மகளாக இரத்தினம்மா பிறந்தார். இவருக்கு செல்லத்துரை, பொன்னுத்துரை ஆகிய இரு சகோதரர்களும் இருந்தனர்.

சின்னத்தம்பி இரத்தினம்மாவை திருமணம் செய்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி வருங்கால் சந்திரராசா, கனகராணி, பத்மாவதி, சறோஜினிதேவி, சந்திரலேகா, கருணாரூபி, சாரதாதேவி, இந்துமதி ஆகிய மக்களைப் பெற்றெடுத்தனர்.

உரிய வயது வந்ததும் மூத்தமகள் கனகராணியை மானிப்பாயைச் சேர்ந்த முருகையா (ஜேர்மன்) என்பவரிற்குத் திருமணம் செய்து சசிகரன் (ஜேர்மன்), காஞ்சனா (அமரர்), நிரஞ்சனா (ஜேர்மன்), வசந்தனா (ஜேர்மன்), சதீஸ்கரன் (ஜேர்மன்) ஆகிய பேரப்பிள்ளைகளையும் ரபீனா, தசீகரன், பெனிசா, டினிசன், தர்சிகா, தனிசா, டிலோஜ், உடேஸ், மெலாணி, கீரன், கவிசன் ஆகிய பூட்டப் பிள்ளைகளையும் பெற்றார்.

பத்மாவதியை கல்வியங்காட்டைச் சேர்ந்த செல்வராசா (கனடா) என்பவருக்கு திருமணம் செய்து முருகானந்தராஜா (லண்டன், டொக்டர்) என்பவரைப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரராசாவிற்கு (ஆசிரியர்) சுதுமலையைச் சேர்ந்த பரமேஸ்வரி (ஆசிரியர்) என்பவரைத் திருமணம் செய்து செந்தில்ராஜன் (லண்டன்), சுஜாதா (கனடா), கஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகிய பேரப்பிள்ளைகளையும் விஷ்ணுப்பிரியன், டறன்யா, டனுஜா, கபிஷங்கர், அனிஷ் ஆகிய பூட்டப் பிள்ளைகளையும் பெற்றார்.

சறோஜினியை மாங்குளத்தைச் சேர்ந்த குமாரசாமி (தபால் உத்தியோகத்தர்) என்பவருக்கு திருமணம் செய்து சுபாஜினி (கனடா), ஜெனகன் (சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்) ஆகிய பேரப்பிள்ளை களையும், கோகுல், தானிகா ஆகிய பூட்டப் பிள்ளைகளையும் பெற்றார்.

சந்திரலேகாவை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகேந்திரம் என்பவரிற்கு திருமணம் செய்து சிவாஜினி, கோபிநாத் (இந்தியா), பிரபாலினி (லண்டன்) ஆகிய பேரப்பிள்ளைகளையும் பிரசன்னா, விஷணுப்பிரியன், டறன்யா ஆகிய பூட்டப் பிள்ளைகளையும் பெற்றார்.

கருணாரூபியை கல்வியங்காட்டைச் சேர்ந்த பாக்கியராசா (பிறின்ரிங் ஒப்பறேற்றர்) என்பவருக்கு திருமணம் செய்து பிரதீபன் (மாவட்ட இணைப்பதிகாரி), பிரதாப் (ஆசிரியர்) ஆகிய பேரப்பிள்ளைகளையும், ராகுல், திஷானிகா ஆகிய பூட்டப் பிள்ளைகளையும் பெற்றார்.

சாரதாதேவியை மானிப்பாயைச் சேர்ந்த ஈஸ்வரோதயம் (மின்சார உத்தியோகத்தர்) அவர்களிற்கு திருமணம் செய்து சனோஜன் (பொறியியலாளர்) டினோயன் ஆகிய பேரப்பிள்ளைகளைப் பெற்றார்.

இந்துமதியினை இந்தியாவில் வசிக்கும் விக்னேஸ்வரன் என்பவருக்கு திருமணம் செய்து சத்தியபிரியா, மணிகண்டன் ஆகிய பேரப்பிள்ளைகளையும் பெற்றார்.

இவர் பிள்ளைகள் மீது பற்றும் பாசமும் கொண்டவர். தன் பிள்ளைகள் எங்கே இருந்தாலும் நல்லாய் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். இதன் காரணமாக அவர்களை வெளிநாடுகளிற்கு அனுப்பி வைத்தார். அவர்களும் இவரது விருப்பம் அறிந்து இந்தியாவில் உள்ள இவரது மகன்களும் அவரை இந்தியா அழைத்து பிரசித்தி பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலங்களிற்கு தலயாத்திரை செய்வதற்கு வாய்ப்பளித்தனர். இந்தியா திருத்தலங்களைத் தரிசித்த பின்பு ஆன்மீகப் பற்றுக் கொண்டவராய் சைவ போசனத்தை மட்டுமே உட்கொண்டார். இவர் மிகுந்த இறைபக்தி கொண்டவராக இருந்தார். இவர் தனது மகளான சாரதாதேவி (அமரர்) அவர்களுடன் தனது சொந்த ஊரான கொக்குவிலில் உள்ளம் மகிழ வாழ்ந்தார். அவர் அமரர் ஆகவே தனது பிள்ளைகளான சரோஜினி தேவியுடனும் கருணாரூபியுடனும் சிறிது காலம் வாழ்ந்தார். இறுதியில் தனது மகனுடன் (சந்திரராசா) வாழ்ந்த இவர் 87ஆவது வயதில் மிகவும் அதிக பராமரிப்பு தேவையான போது தனது மகள் சறோஜினிதேவியுடனும் கனடாவில் உள்ள தனது மகள் பத்மாவதி யுடனும் மீண்டும் தனது சொந்த ஊரில் சில மாதங்கள் வாழ்ந்த மகிழச்சியுடன், அவரது தேவைகளைச் சிறப்பாக கவனிப்பதற்கு அவரது பேரப்பிள்ளையான முருகானந்தராஜா தனது கவனிப்பில் உரிய ஒழுங்குகளை செய்து கொடுத்த நிலையில் 15.01.2011 தைப்பொங்கல் திருநாளில் தனது மகளான சரோஜினிதேவியின் மடியில் பேரன் ஜெனகன் அவர்களிடம் இறுதியாய் பால்பருகி இறைவனடி சேர்ந்தார்.

அவரது விருப்பம் போல் அவரது பிள்ளைகள் மிகச்சிறப்பாக வாழ்ந்து பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளின் மழலை சிரிப்பினை அனுபவித்து உயர்வான வைத்தியர், பொறியியலாளர், ஆசிரியர், அரச உத்தியோகத்தர்கள் என்ற நிலையில் கல்விச் செழிப்புடன் கூடிய செல்வச் செழிப்பில் அவர் பெருமையை பறைசாற்றி வாழ்கின்றனர்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பல்

எமக்கு உயிர்தந்து உலகைக் காட்டி
எம்மைப் பெற்று எம்மை உயரத் தூக்கிவிட்ட
எமது அன்னையே

அன்புக்கு இலக்கணமாய் எம்மை வளர்த்து
எமக்காக வாழ்ந்து விட்டு
எம்மை விட்டு எங்கு சென்று விட்டாய் அம்மா

எம் மனதில் அமைதியின்றி எம் கிழக்கில் உதயமின்றி
கண்களில் கண்ணீா் வற்றி விட்டதம்மா
எம் பாசமிகு அன்னையே எம் கையால் உண்ணாமல்
எம் முகத்தைப் பார்க்காமல் எங்கு போய் விட்டாய்
வருவாய் வருவாய் என வாசலில்
பாத்திருப்போம் அம்மா இப்போ நிரந்தரமாய்
உம்மக்களைப் பார்க்காமல் போய் விட்டாய் அம்மா.

## மருமக்கள் புலம்பல்

அன்பாக எம்மை ஆதரிக்கும் மாமியே
அறியவில்லை எம்மைவிட்டு நீங்கள் செல்வீகள் என்று
இனியமுகத்துடன் இன்பமான பேச்சுடன்
எம் மனத்தைக் கவா்ந்தவரே
அமைதியான சுபாவம் கொண்ட மாமியே
உங்களை இழந்து தவிக்கின்றோம்
தாயாக பழகிய மாமியே
பரிதவிக்க விட்டு விட்டீர்களே.
மாமியே இனி எப்போ உங்களை காண்போமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

பாட்டி நீர் எங்கு சென்றீர்
இனிய மொழி பேசி நீர் எம்மோடு மகிழ்வீரே
கனி மொழி கூறியே கதைகதையாய் சொன்னீரே
இன்பமுடன் எம்மோடு இனிதே
வாழ்ந்திட நீா விரும்பவில்லையா?
உம் போலே அன்பு மொழி பேச
இனி யாருளரோ இப் பூமியிலே
பரலோகம் சிறந்திடவே
பாய்ந்தோடி சென்றீரோ பாட்டியே!
உம் ஆத்மா சாந்தி பெற
மலர் தூவி பணிகின்சோம் பாட்டியே.

## பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

அன்பாக எம்மை ஆதரிக்கும் பூட்டியே
அறியவில்லை எம்மைவிட்டு நீங்கள் செல்வீர்கள் என்று
இனியமுகத்துடன் இன்பமான பேச்சுடன்
எம் மனத்தைக் கவர்ந்தவரே
ஆசைக் கதைகள் பல செல்லி மகிழ்வித்தீர்களே!
பரிதவிக்க விட்டு விட்டீர்களே.

## தேற்றம்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கும் அதுவழியே யாம் போமளவும்
எமக் கென்ன வென்று இட்டுண்டு இரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங்கை கூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## *நூல்*

நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யௌவும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுஉடல் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சயலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா! கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக!
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்!
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சிப் புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டிலேயே மருத்துவம்

◆ தினமும் அதிகாலையில் செடிகள் மீது படர்ந்திருக்கும் பனித்துளிகளைப் பஞ்சினால் ஒற்றியெடுத்து முகத்தில் தடவி வந்தால் முகம் பளபளப்பாக விளங்கும்.

◆ முகத்தில் வெள்ளைத் தேமல் இருந்தால் துளசியையும் சிறிதளவு உப்பையும் சேர்த்து அரைத்த சாற்றை தேமல் மீது தடவினால் தேமல் மறைந்து விடும்.

◆ கீரை விதையை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி தலைக்குத் தேய்த்து வந்தால் கூந்தல் வளரும் கருமைநிறம் அதிகரிக்கும். முடி உதிராது.

◆ நந்தியாவட்டை மலர்களைப் பறித்து வந்து இரவில் கண்களில் வைத்துக் கட்டிக் கொண்டு தூங்கவும். காலையில் பாருங்கள் கண்களில் குளிர்ச்சியே குளிர்ச்சி.

◆ கரட் கிழங்கு உடல் இளைக்கவும் கண்ணொளியை ஊக்குவிக்கவும் உதவுகிறது.

◆ மல்லிகை மலர்கள் பார்வையைச் சீராக்கும்.

◆ நந்தியாவட்டை மலருக்கு சகல கண்நோய்களையும் அகற்றும் சக்தி உண்டு.

◆ காலையில் வெறும் வயிற்றில் பாதாம் பருப்புகளைச் சாப்பிட்டு வந்தால் கண்ணில் நீர் வடிவதைத் தடுக்கலாம்.

◆ காதுக்குள் கொப்புளம், கட்டி இருந்தால் பூண்டுச்சாற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில துளிகளை விட்டால் கட்டிகள் பழுத்து உடைந்து விடும்.

◆ வாய்துர்நாற்றம் உள்ளவர்கள் காலையில் எழுந்ததும் ஒரு தேக்கரண்டி நல்லெண்ணெயை வாயில் விட்டு கொப்பளித்து வந்தால் இரண்டொரு நாட்களில் துர்நாற்றம் அறவே ஒழிந்து விடும்.

◆ கடுக்காய் தூளால் பல்துலக்க பல்வலி, பல்லில் சீழ், புண் ஆகியவை குணமாகும்.

◆ சுக்கும் பனை வெல்லமும் போட்டுக் காய்ச்சிய நீரைக் குடித்து வந்தால் பித்தம் ஏற்படாது.

◆ இருதயம் பலவீனமாக இருப்பவர்களுக்குத் தேன் சிறந்த மருந்து. முட்டையின் மஞ்சள் கருவையும் தேனையும் கலந்து சாப்பிட்டு வந்தால் இருதயம் பலப்படும்.

◆ உப்பை உணவில் குறைத்துச் சேர்க்க வேண்டும். இதுவே பழக்கமாகி விட்டால் ரத்த அழுத்த நோயைப்பற்றி கவலைப்படவே வேண்டாம்.

◆ வயிற்றுக் கோளாறு, ஜீரணக் கோளாறு உள்ளவர்கள் அடிக்கடி பழச்சாறு சாப்பிடுவது நல்லது

◆ சீரகத்தை லேசாக வறுத்து பொடி செய்து அதில் பனை வெல்லத்தைச் சேர்த்து சாப்பிட்டு வந்தால் நன்றாகப் பசி எடுக்கும். ஜீரணக் கோளாறு நீங்கும்.

◆ ஐந்து மிளகு, ஐந்து கிராம் சீரகம் இரண்டையும் வறுத்து, இடித்து சாப்பிட்டு சுடுநீர் குடிக்க அஜீரணம் தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு............

| | | | |
|---|---|---|---|
| 1. | மிக நல்ல நாள் | - | இன்று |
| 2. | மிகப் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| 3. | மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| 4. | மிகப் பெரிய தேவை | - | சமயோசித புத்தி |
| 5. | மிகவும் கொடிய நோய் | - | பேராசை |
| 6. | மிகவும் சுலபமானது | - | குற்றங்காணல் |
| 7. | கீழ்த்தரமான விடயம் | - | பொறாமை |
| 8. | நம்பக் கூடாதது | - | வதந்தி |
| 9. | ஆபத்தினை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| 10. | செய்யக் கூடாதது | - | உபதேசம் |
| 11. | செய்ய வேண்டியது | - | உதவி |
| 12. | விலக்க வேண்டியது | - | விவாதம் |
| 13. | உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| 14. | நழுவவிடக் கூடாது | - | வாய்ப்பு |
| 15. | இளமையில் தேவை | - | கல்வி |
| 16. | உருகும் உள்ளத்தில் உதிப்பது | - | அன்பு |
| 17. | இறுகும் உள்ளத்தில் உதிப்பது | - | அகந்தை |
| 18. | அன்பு விளைவிப்பது | - | ஒற்றுமை |
| 19. | அகந்தை விளைவிப்பது | - | வேற்றுமை |
| 20. | வேற்றுமையில் விளைவது | - | துன்பம் |
| 21. | வருவதும் போவதும் | - | இன்பம், துன்பம் |
| 22. | வந்தால் போகாதது | - | அவமானம், பழி |
| 23. | போனால் வராதவை | - | மானம், உயிர் |
| 24. | தானாக வருவது | - | இளமை, முதுமை |
| 25. | நம்முடன் வருவது | - | பாவம், புண்ணியம் |
| 26. | அடக்க முடியாதது | - | ஆசை, துக்கம் |
| 27. | தவிர்க்க முடியாதது | - | பசி, தாகம் |
| 28. | நம்மால் பிரிக்க முடியாதது | - | பாசம், பந்தம் |
| 29. | அழிவைத் தருவது | - | பொறாமை, கோபம் |
| 30. | எல்லோருக்கும் சமமானது | - | பிறப்பு, இறப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றெழுத்தில் வாழ்க்கை

உலகில் உள்ள உயிர் மூன்றெழுத்து
உயிரை இயக்கும் சக்தி மூன்றெழுத்து
சக்தியின் வடிவம் அன்னை மூன்றெழுத்து
அன்னை காட்டும் அன்பு மூன்றெழுத்து
அன்பை உயர்த்தும் அறிவு மூன்றெழுத்து
அறிவை வளர்க்கும் பள்ளி மூன்றெழுத்து
பள்ளியிற் கற்கும் கல்வி மூன்றெழுத்து
கல்வியால் கிடைக்கும் பதவி மூன்றெழுத்து
பதவியைச் சிறப்பிக்கும் இளமை மூன்றெழுத்து
இளமை தரும் மணம் மூன்றெழுத்து
மணத்தால் இணையும் மனைவி மூன்றெழுத்து
மனைவியால் உறவாகும் மழலை மூன்றெழுத்து
மழலைக்குச் செலவாகும் பணம் மூன்றெழுத்து
பணத்தினைத் தேடும் உடல் மூன்றெழுத்து
உடல் சோரும் முதுமை மூன்றெழுத்து
முதுமையின் பின் முடிவு மூன்றெழுத்து
முடிவின் பின் தேவைப்படும் பெட்டி மூன்றெழுத்து
பெட்டியில் அடங்கும் பிணம் மூன்றெழுத்து
பிணம் எடுத்துச் செல்லும் ஊர்தி மூன்றெழுத்து
ஊர்தி செல்லும் இடம் சுடலை மூன்றெழுத்து
சுடலையில் வைக்கும் கொள்ளி மூன்றெழுத்து
கொள்ளியில் எரிந்த அஸ்தி மூன்றெழுத்து
அஸ்தி கரையும் கடல் மூன்றெழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

- மார்க்கண்டு + வள்ளிப்பிள்ளை
  - சின்னையா
  - யோகம்மா
  - நல்லையா
  - சின்னத்தம்பி
    - சந்திரராசா + பரமேஸ்வரி
      - செந்தில்ராஜன் + பிரபாலினி (லண்டன்)
        - விஸ்ணுப்பிரியன்
        - டறன்யா
      - சுஜாதா + பிரபாகரன் (கனடா)
        - டனுஜா
        - கபிஷங்கர்
      - கஜேந்திரன் + சுகிர்தா (பிரான்ஸ்)
        - அனுஷ்
    - கனகராணி + முருகையா
      - சசிகரன் + அகல்விழி (ஜேர்மன்)
        - ரபீனா
        - சசீகரன்
        - பெனிசா
      - நிரஞ்சனா + சுரேஸ் (ஜேர்மன்)
        - டினிசன்
        - தர்சிகா
        - தனிசா
      - வசந்தன் + ஜெயக்குமார் (ஜேர்மன்)
        - டிலோஜ்
        - உடேஸ்
        - மெலானி
      - சதீஸ்கரன் + வதனி (ஜேர்மன்)
        - கீரன்
        - கவிசன்
    - பத்மாவதி + செல்வராசா
      - முருகானந்தராஜா + துர்க்கா (லண்டன்)
    - சரோஜினிதே + குமாரசாமி
      - சுபாஜினி + ஸ்ரீஸ்கந்தரஜா (கனடா)
        - கோகுலராஜ்
        - தானிக்கா
      - ஜென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...சாவழி

சுவாமிநாதன் + வியாழப்பிள்ளை

- செல்லத்துரை
- பொன்னுத்துரை
- இரத்தினம்மா

...னிதேவி + ...ரசாமி
- ஜெனகன்
- ...ஜ்

சந்திரலோகா + நாகேந்திரன்
- சிவாஜினி + செல்வராசா (இந்தியா)
  - பிரசன்னா
- கோபிநாத் (இந்தியா)
- பிரபாலினி + செந்தில்ராஜன் (லண்டன்)
  - விஸ்ணுபிரியன்
  - டறன்யா

கருணாரூபி + பாக்கியராசா
- பிரதீபன் + சோபனா
  - ராகுலன்
- பிரதாப் + சுஜாதா
  - திஷானிகா

சாரதாதேவி + ஈஸ்வரோதயம்
- சனோஜன்
- டினோஜன்

இந்துமதி + விக்னேஸ்வரன்
- சத்தியப்பிரியா
- மணிகண்டன் (இந்தியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்





**கடந்த 15-01-2011 அன்று இறைபதமடைந்த**

**எங்கள் குடும்பத் தலைவி**

**அமரர்**

**சின்னத்தம்பி இரத்தினம்மா**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியை அறிந்து உடன் வருகை தந்து வேண்டிய உதவிகள், ஒத்தாசை வழங்கியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோரிற்கும், உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், இறுதியாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் சகல வழிகளிலும் உதவி செய்தோருக்கும், அந்தியேட்டி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்தவர்களிற்கும், ஆத்மசாந்தி கிரியைகளில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள், யாவர்க்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**நன்றி**


**நந்தாவில் லேன்,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**குடும்பத்தினர்.**

திருவள்ளுவர் அச்சகம், 593, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



திருவள்ளுவர் அச்சகம், 593, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

Sivaranjanam 620

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org